**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப.,**

**ந.க.எண்.ங3/37443/2019** **நாள்: 21.01.2022**

பொருள் **பணிவரன்முறை** - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திருநெல்வேலி மாவட்டம் - மாவட்ட ஊராட்சி அலுவலகம் - துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்த **ஹரிலால்(திரு.) சி.,** என்பவர் 17.02.2019-ல் பணியிடைக் காலமானது - வாரிசும் மகனுமான **கோபிநாத்(செல்வன்.) ஹ.,** என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.18 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(Q1) துறை நாள்:23.01.2020.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.ங3/37443/2019 நாள்:30.11.2019
3. அரசாணை(நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்: 26.02.2020.
4. அரசு இணைச் செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை கடித எண். 6895/இ3/2021-5 நாள்: 14.12.2021.
5. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 18355/2021/டி2/18.12.2021.

**********

**ஆணை:**

திருநெல்வேலி மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 17.02.2019 அன்று பணியிடைக்காலமான **திரு.சி.ஹரிலால்** என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான **செல்வன்.ஹ.கோபிநாத்** என்பவரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் 02.12.2019 முற்பகல் பணியேற்பு செய்துள்ளார். தனியரின் இளநிலை உதவியாளர் நிலையிலான பணியினை வரன்முறை செய்திடும் பொருட்டு அனுப்பப்பட்ட கருத்துருவானது பார்வை 3-ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்திட கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

***பார்வை 3-ல் காணும் அரசாணை பத்தி எண். 5.1-ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டதெனவும், பணிவரன்முறை***

ஆணையினை சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்(appointing authority) நிலையைவிட ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) என்ற நிலையில் மாவட்ட ஆட்சியரால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சியாரால் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிட பார்வை 4 மற்றும் 5-ல் காணும் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 3-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை (4) மற்றும் (5)-ல் காணும் கடிதங்களில் வழங்கப்பட்ட தெளிவுரையின் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட **செல்வன்.ஹ.கோபிநாத்** என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், இளநிலை உதவயிாளர் பதவியில் 02.12.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல்த்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 02.12.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

21/1/2022

மாவட்ட ஆட்சியருக்காக,
திருநெல்வேலி.

21/01/2022

பெறுநர்
செல்வன்.ஹ.கோபிநாத்,
ஊர்நல அலுவலர் நிலை-2
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்(உரிய வழியாக)
நகல்
1. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பாளையங்கோட்டை.
2. ஙு3 இருப்பு கோப்புக்கு